முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 89/2021

**வாதி தரப்பு சாட்சி-1 புண்ணியமூர்த்தி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.248/2D ஆகும். சர்வே எண்.248/2D ன் பழைய சர்வே எண் என்னவென்றால் அது பற்றி தெரியாது. என் பாட்டார் பெயர் ஓந்தான் என்கிற குப்பன். என் தகப்பனார் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். வழியான் என்பவர் என் கடைசி பாட்டார். பேரான் என்பவர் என் பெரிய பாட்டார். என் பாட்டாவின் தங்கை பெயர் முதலச்சி அம்மாள். முதலச்சி தகப்பனார் பெயர் ஆறுமுகம். ஆறுமுகத்திற்கு பேரான், ஓந்தான்(எ) குப்பான், வழியான், முதலச்சி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வழியான் திருமணமாகமல் இறந்துவிட்டாரா என்றால் இல்லை அவருக்கு இரண்டு மனைவிகள். அவருக்கு இரண்டு மனைவிகள் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அவரது இரண்டு மனைவியர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

2) வழியான் என்பவருக்கு இரண்டு திருமணமானது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் பெரிய பாட்டன் பேரான் என்பவருக்கு நடேசன், கருப்பன் என்பவர்கள் வாரிசு என்றால் சரிதான். முதலச்சி அம்மாள் கணவர் மற்றும் மகன் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் விபரம் சொல்ல நானும், என் தகப்பனாருடன் சென்றேனா என்றால் ஆமாம். மாரியாயி கணவர் பெயர் கருப்பன் என்றால் சரிதான். மாரியாயின் மாமியார் முதலச்சி அம்மாள் என்றால் சரிதான். மாரியாயின் குழந்தைகள் பெருமாள், பெரியக்காள் என்றால் சரிதான். மாரியாயி, பெரியக்காள் இருவரும் தான் இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பெரியக்காளின் சகோதரர் தான் பெருமாள் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி தாமரை பெருமாளின் மனைவி என்றால் சரிதான். பெருமாள், தாமரையின் வாரிசுகள் 1, 6, 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சிவகுமாரின் மனைவி பெயர் குஷ்பு என்றால் சரிதான்.

3) குஷ்புவின் தகப்பனார் பெயர் மணியன் என்றால் சரிதான். குஷ்புவின் பாட்டார் பெயர் நடேசன் என்றால் சரிதான். நடேசன் மாரியாயின் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். நடேசன், கருப்பன், மாரியாயி, ஆராயி ஆகியோர் பேரானின் வாரிசுகள் என்றால் சரிதான். ஆராயி மகன் பெயர் வீரமலை என்றால் தெரியாது. மணி என்பவர் அண்ணன் பெயர் ஆறுமுகம். குஷ்புவின் பெரியப்பாதான் ஆறுமுகம் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் வாரிசுகளான பேரான், ஓந்தான்(எ)குப்பன், வழியான், முதலச்சி ஆகியோருக்கு இடையே

பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் சரியல்ல. பேரான், ஓந்தான்(எ)குப்பன், வழியான், ஆகியோர் மட்டும் பாகம் பிரித்துக் கொண்டனர். சர்வே எண்.248/2 என்பது வழியானுக்கு பாகம் பிரிந்ததா என்றால் ஆமாம். வழியானுக்கு சர்வே எண்.237/2, 248/4 ஆகிய சொத்துக்களும் பாகம் பிரிந்தது என்றால் சரிதான். பேரான் என்பவருக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் பாட்டனார் சொத்தை மூன்றாக பிரித்துக்கொண்டார்கள்.

4) பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை படித்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பேரானுக்கு பதிலுரையில் குறிப்பிட்டுள்ள A அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதா என்றால் ஆமாம். பதிலுரையில் குறிப்பிட்டுள்ள B அயிட்ட சொத்துக்கள் ஓந்தான் என்பவருக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் ஆமாம். ஓந்தான் என்பவர் தனக்கு பிரிந்த சொத்துக்களில் சர்வே எண்.248/2-ஐ தன் சகோதரி முதலச்சி என்பவருக்கு கிரையம் செய்த விபரம் இவ்வழக்கு தாக்கல் செய்தபோது தெரியுமா என்றால் கிரையம் செய்யவில்லை. பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் முதலச்சி அம்மாளுக்கு கிரையம் செய்துள்ளதாக சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம். அந்த கிரைய ஆவணத்தின் நகல் போட்டுப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

5) எப்போது நகல் போட்டேன் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு போட்டேன். வழக்கு தாக்கல் செய்த பின்பும் நகல் போட்டேன். மேற்படி நகல்களை வைத்துள்ளேனா என்றால் வீட்டில் வைத்துள்ளேன். என் தகப்பனார் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வரவில்லை. அவருக்கு உடல்நிலை சரியில்லை. இதற்கு முந்தைய வாய்தாவிற்கு வந்தாரா என்றால் வந்தார்.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**